




## சென்னை கிழக்கு மாவட்டத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு:

# 200 தொகுதிகளில் தி.மு.கழகக் கூட்டணி வெற்றிபெற அயராது மக்கள் பணி -கழகப் பணி ஆற்றிடுவோம்!

## நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

*சென்னை,ஆக.16-*

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, கலைஞரின் நேசத்துக்குரிய மூத்த உடன்பிறப்புகளுக்கு பொற்கிழி மற்றும் மாணவர்கள் - மகளிர் - திருநர் - விளையாட்டு வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``2026-இல் கழக அணியை மாபெரும் வெற்றி பெறச் செய்து, கழகத்தலைவர் அவர்களை மீண்டும் முதலமைச்சராக்கிட உழைப்போம்” எனக் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம் சார்பாக, கழக மூத்த முன்னோடிகளுக்கு, மாணவ-மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை, மடிக்கணினி, மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த திருநர்களுக்கு உதவித்தொகை, விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் இந்நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதற்கான வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

நான் சென்னை மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனக்கு வாக்கு இருப்பது மயிலாப்பூர் தொகுதியில். நான் குடியிருப்பதும், அதே மயிலாப்பூர் தொகுதியில்தான். நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பது, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி. ஆனால், அதிகமாக எனது நேரத்தைச் செலவிடுவது, இந்த சென்னை கிழக்கு மாவட்டம்தான். பத்து நாட்களுக்கு முன்பு இதேபோல் ஒரு நிகழ்ச்சியை அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்து, என்னை அழைத்திருந்தார்.

இன்றைக்குக்கூட, ‘ஒரேயொரு நிகழ்ச்சிதான், வாருங்கள்’ என்று சொல்லித்தான் அழைத்து வந்தார். வந்தபிறகுதான் தெரிகிறது, கிட்டத்தட்ட 6 நிகழ்ச்சிகளை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் எப்போதுமே அப்படித்தான் செய்வார். அவரின் பழக்கம் அதுதான். அவர் எத்தனை நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தாலும், நானும் வருவேன் என்பதும் அவருக்குத் தெரியும்.

**அன்புக் கட்டளை**

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். எந்த மாவட்டச் செயலாளர் என்னிடம் தேதி கேட்டாலும், அது கழக நிகழ்ச்சி, கட்சி நிகழ்ச்சி என எதுவாக இருந்தாலும், நான் அந்த மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான். நான் நிச்சயம் வருகிறேன். எத்தனை நிகழ்ச்சியில் வேண்டுமானாலும் நான் கலந்து கொள்கிறேன். ஆனால், என் மகிழ்ச்சிக்காக ஒரு நிகழ்ச்சியை நீங்கள் நடத்த வேண்டும். அது, கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி என்றுச் சொல்லி, மாவட்டச் செயலாளர்களிடம் ஒரு அன்புக் கட்டளை, வேண்டுகோள் வைப்பது எனது வழக்கம்.

இங்கு, அதையும் நான் சொல்லாமலே ஏற்பாடு செய்திருகிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, அடுத்த நிகழ்ச்சியாக கழகத்தின் துணை அமைப்புச் செயலாளர், உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தாயகம் கவி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 உடற்பயிற்சிக் கூடங்கள் ஒரு விளையாட்டுத் திடல், ஒரு அங்கன்வாடி, 5 நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள், 9 நிழற்குடைகளைத் திறந்து வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் அண்ணன் தாயகம் கவி அவர்கள் என்னிடம் தேதி வாங்கியிருந்தார்.



இந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினராக அவருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் உங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிறந்த எடுத்துக்காட்டு**

நமது அரசு, திராவிட மாடல் அரசாக நடைபெறும் என்று, 2021-இல் நாம் ஆட்சி அமைத்தபோது, நமது தலைவர் சொன்னார். எல்லாரும், `திராவிட மாடல் அரசு என்றால் என்ன’ எனக் கேட்டனர். அதற்கு தலைவர் அவர்கள் `எல்லாருக்கும் எல்லாம், எல்லாருக்குமான அரசுதான் திராவிட மாடல் அரசு’ என்று சொன்னார். அப்படித்தான் தொடர்ந்து நமது நான்காண்டு ஆட்சியையும் தலைவர் நடத்தி வருகிறார். அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இன்று நடந்து இருக்கின்ற நிகழ்ச்சிகள். அண்ணன் சேகர்பாபு அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பார்த்து அமைத்திருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு தேவையான கல்வி உதவித்தொகை, மடிக்கணினி, அழகுப் பயிற்சி வகுப்புகள், மக்களுக்கான நியாய விலைக் கடைகள் இப்படி எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து அண்ணன் சேகர்பாபு அவர்கள் நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறார்.

**365 நாளும் நிகழ்ச்சிகள்**

நான் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியின் சட்டமன்ற உறுப்பினர். ஆனால், எனக்கு இந்த சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வரும்போது, இந்த மாவட்டத்திற்கு வந்து ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடலாமா என்று பலமுறை ஆசை வந்திருக்கிறது. ஏனென்றால், இன்று கலைஞர் நினைவு நாளுக்கு ஒரு நிகழ்ச்சி, கலைஞர் பிறந்த நாளுக்கு ஒரு நிகழ்ச்சி, கழகத் தலைவர் பிறந்த நாளுக்கு நிகழ்ச்சி, என்னுடைய பிறந்த நாளுக்கு நிகழ்ச்சி, தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் என்று 365 நாளும் நிகழ்ச்சிகள் நடக்கின்ற மாவட்டம் என்றால், இந்த சென்னை கிழக்கு மாவட்டம்தான்.

எப்படி இவ்வளவு நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள் என நான் பலமுறை அண்ணன் சேகர்பாபு அவர்களிடம் கேட்டிருக்கிறேன். இதற்காகவே ஒரு குழு வைத்து இருக்கிறீர்களா என்று கேட்கத் தோன்றுகிறது. நலத்திட்டப் பயனாளிகளைக் கண்டுபிடித்து, அதிலும் கழகக் குடும்பம் என்றால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சிறப்பாக நிகழ்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார்.

**பறிக்க முடியாத சொத்து**

> **“தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். குறைந்தது 200 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கைக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே இந்தத் தொகுதி முதல் தொகுதியாக இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் அத்தனைபேரும் அடுத்த 5,6 மாதங்களுக்கு தேர்தல் பிரச்சாரப் பணிகளிலும், கழகப் பணிகளிலும் சிறப்பாக ஈடுபட வேண்டும்.”**

மாணவச் செல்வங்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார். உங்களிடம் இருந்து பறிக்க முடியாத சொத்து உங்களின் கல்விதான். அதை நம் அரசு பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறது. இங்கு, மாணவர்களுக்கு இணையாக, இன்னும் சொல்லப்போனால் மாணவர்களை விட அதிகமாக மகளிர் வந்திருக்கிறீர்கள். அதில் இன்னும் கூடுதல் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் செயல்படுத்தியுள்ள தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களை நீங்கள் மாணவர்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள், எந்தக் கல்லூரிக்குச் சென்று உயர்கல்வி படித்தாலும் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை கொடுக்கின்ற அரசு நம் திராவிட மாடல் அரசு.

இப்படி ஒவ்வொன்றையும் தலைவர் அவர்கள் மாணவர்களுக்கு செய்துகொண்டு வருகிறார். இன்றைக்கு உங்களின் வாழ்க்கையில் அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஒளி ஏற்றி வைத்திருக்கிறார். நாளை நீங்கள் ஒரு நல்ல நிலைமைக்கு வந்து, நீங்கள் ஒரு பத்து பேருக்கு வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்கின்ற நிலைமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**நீங்கள்தான் கழகத்தின் வரலாறு**

இங்கு வந்து இருக்கின்ற கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள்தான் கழகத்தின் வரலாறு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்தார் என்று நாம் பெருமையாக சொல்கிறோம். அதற்கும், இன்றைக்கு நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார் என்றால் அதற்கும், இங்கு வந்திருக்கின்ற கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள்தான் முழுக்காரணம். உங்களுக்கு இன்றைக்கு நலத்திட்ட உதவியாக பொற்கிழி கொடுத்து இருக்கிறார்கள். அதையெல்லாம் விட பெருமையாக நீங்கள் கருதுவது உங்கள் கழுத்தில் போட்டிருக்கின்ற கருப்பு-சிவப்பு துண்டைத்தான்.

நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் உங்களை எல்லாம் பார்க்கும்போது பெருமையாக இருக்கும். பெருமை என்னவென்றால், நீங்கள்தான் கழகத்தின் வரலாறு. நீங்கள் இல்லாமல் கழகம் கிடையாது. அதே நேரத்தில் பொறாமையாகவும் இருக்கும். நீங்கள் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள், உங்களில் பல பேர் பேரறிஞர் அண்ணாவுடன் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு இருப்பீர்கள். அண்ணாவுடன் கட்சி நிகழ்ச்சிகள், பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று இருப்பீர்கள். முத்தமிழறிஞர் கலைஞருடன் கூட்டங்களில், போராட்டங்களில் கலந்து கொண்டிருப்பீர்கள், நம் தலைவருடனும் போராட்டங்களில் கலந்து கொண்டிருப்பீர்கள். நான் தந்தை பெரியாரை நேரில் பார்த்தது கிடையாது. புகைப்படங்களில் பார்த்தது மட்டும்தான். பேரறிஞர் அண்ணா அவர்களை நான் நேரில் பார்த்தது கிடையாது. ஆனால், நீங்கள் எல்லாம் அவர்களோடு பயணித்து இருப்பீர்கள். அதனால்தான் உங்களைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கும்.

தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், நம் தலைவர் கலைஞரின் மறுவுருவமாகப் பார்த்து, உங்களை எல்லாம் வணங்கி மகிழ்கிறேன். இதை இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் செய்ய வேண்டிய கடமையாகப் பார்க்காமல், ஒரு பேரன் தன் தாத்தாக்களுக்கும், பாட்டிகளுக்கும் செய்கின்ற கடமையாகத்தான் பார்க்கிறேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

**200 தொகுதிகளில் வெற்றி**

நம் கழகத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல இன்னொரு 6, 7 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். குறைந்தது 200 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கைக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே இந்தத் தொகுதி முதல் தொகுதியாக இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் அத்தனைப்பேரும் அடுத்த 5, 6 மாதங்களுக்கு தேர்தல் பிரச்சாரப் பணிகளிலும், கழகப் பணிகளிலும் சிறப்பாக ஈடுபட வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் வணக்கத்தையும், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், பகுதிக் கழகச் செயலாளர்கள் சாமிக்கண்ணு, தமிழ்வேந்தன், முரளி, ராஜசேகர், வேலு, சுதாகர், கூ.பி.ஜெயின், வாசு, ஐ.சி.எஃப்.முரளி, நாகராஜன், டி.எஸ்.பி.இராஜகோபால், நாகராஜ், கழகத்தின் மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, புலவர் சாமி நாகப்பன், நாதன், வழக்கறிஞர் சந்துரு, சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் நரேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, மருத்துவர் யாழினி, முனியாண்டி, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி எத்திராசன், ஜி.எம்.தேவன், ஆசாத், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் பி.கே. மூர்த்தி, ஸ்ரீராமலு, சரிதா மகேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மகேஷ்குமார், விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ், தனசேகர், வினோத், பிரபு, பொதுக்குழு உறுப்பினர்கள் துளசிங்கம், உதயசங்கர், மாமன்ற உறுப்பினர்கள் சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்ச்செல்வி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் மணிகண்டன், ஸ்ரீதர் ராஜன், டீக்கா, அபய் மற்றும் கழக முன்னோடிகள் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.